# PRE BOARD EXAMINATION – (FEBRUARY – 2018)

**CLASS: X Div: ____ Subject : TAMIL Time: 3 hrs.**

**Date……………. MAX. MARKS: 80**

**NAME: …………………………………… Roll No…….**

**இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.**

**பிரிவு - அ படித்தல் - 15 மதிப்பெண்கள்**

**பிரிவு - ஆ எழுதுதல் - 14 மதிப்பெண்கள்**

**பிரிவு - இ இலக்கணம் - 15 மதிப்பெண்கள்**

**பிரிவு - ஈ இலக்கியம் - 36 மதிப்பெண்கள்**

## பகுதி - அ - படித்தல்

1. **பின்வரும் பத்தியைப் படித்து பல்விடை வினாக்களுக்கேற்ற விடைகளை எழுதுக.** **5**

நாட்டில் உள்ள பழமையான பெரு நகரங்களில் மிக முக்கியமானது சென்னை. 1639 முதல் சென்னை மாநகராட்சிக்கு நீண்ட வரலாறு உள்ளது. இந்தியாவை ஆண்ட ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனியினரால் 1688-ம் ஆண்டில் சென்னை முனிசிபல் கார்பரேஷன் அமைக்கப்பட்டது. சென்னை மாநகராட்சி 1798-ல் நிறுவப்பட்டது. அது இன்று உலக வரைபடத்தில் இடம்பெறும் அளவிற்கு சிறந்த வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இந்தியாவின் கலாச்சாரத் தலைநகராக விளங்கும் சென்னை மாநகரில் எல்லா மதத்தினரும் எல்லா மொழியினரும் வாழ்ந்து வருவதும் நவீன மாற்றங்களுக்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொண்டிருப்பதும் "மெட்ரோபொலிட்டன்" நகரம் என்ற அந்தஸ்தை இந்நகருக்குக் கிடைக்கச் செய்துள்ளது. சென்னை, பல்வேறு பகுதிகளில் இருந்து வருபவர்களின் குடியேறுபவர் நகரமாக இருந்து வருகிறது. சென்னை மக்கள் தொகையில் குடியேறியவர்களின் எண்ணிக்கை 60 சதவீதமாக உள்ளது.

**வினாக்கள்:**

(i) சென்னை எப்போது அமைக்கப்பட்டது?

அ. 1679 இ. 1649

ஆ.1688 ஈ. 1639

(ii) சென்னை எப்படிப்பட்ட வளர்ச்சியைப் பெற்றுள்ளது?

அ. உலக வரைபடத்தில் இடம் பெறமுடியாமல்

ஆ. உலக வரைபடத்தில் இடம் பெறா

இ. உலக வரைபடத்தில் ஒரு மூலையில் இடம் பெறும்

ஈ. உலக வரைபடத்தில் இடம் பெறும்

(iii) சென்னை நகருக்கு எந்த அந்தஸ்து கிடைத்துள்ளது?

அ. காஸ்மொபாலிட்டன் இ. கார்ப்பரேஷன்

ஆ. மெட்ரோபாலிட்டன் ஈ. முனிசிபல்

(iv) சென்னை மக்கள் தொகையில் குடியேறியவர்களின் எண்ணிக்கை எத்தனை சதவீதமாக உள்ளது?

அ. 25 சதவீதம் இ. 50 சதவீதம்

ஆ.40 சதவீதம் ஈ. 60 சதவீதம்

(v) 1688-ம் ஆண்டில் சென்னை முனிசிபல் கார்ப்பரேஷன் யாரால் அமைக்கப்பட்டது.?

அ. மேற்கிந்திய கம்பெனியினரால் இ. வடக்கிந்திய கம்பெனியினரால்

ஆ. கிழக்கிந்திய கம்பெனியினரால் ஈ. தெற்கிந்திய கம்பெனியினரால்

**2. பின்வரும் பத்தியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கேற்ற விடைகளை எழுதுக. 5**

பொக்ரானில் இந்தியா இரண்டாவது அணுகுண்டை வெற்றிகரமாக வெடித்து சோதனை நடத்த மூளையாக இருந்து செயல்பட்டவர் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானி எ.பி.ஜே. அப்துல்கலாம் அவர்கள். அவர் இராமேசுவரத்தில் 1931-ல் பிறந்தார். தந்தை பெயர் எ.பி.ஜெயினுலாப்தின் மரைக்காயர். தாயார் அசீயா. திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில்படித்து பட்டம் பெற்றார். 1998-ல் இராஜஸ்தானில் உள்ள பொக்ரானில் இந்தியாவின் இரண்டாவது அணுகுண்டு வெற்றிகரமாக வெடித்து சோதித்துப் பார்க்கப்பட்டது. அதற்கு கலாமிற்கு உறுதுணையாக இருந்தவர் இன்னொரு விஞ்ஞானி சிதம்பரம். கலாமின் சேவையைப் பாராட்டி இந்தியாவின் மிக உயர்ந்த விருதான பாரதரத்னா விருது வழங்கப்பட்டது.

**வினாக்கள்:**

i) பொக்ரான் என்ற இடம் இந்தியாவின் எந்த மாநிலத்தில் உள்ளது?

அ. மத்தியப்பிரதேசம் இ. மகாராஷ்டிரா

ஆ. இராஜஸ்தான் ஈ. தமிழ்நாடு

ii) எ.பி.ஜே அப்துல்கலாம் அவர்கள் பிறந்த இடம் எது?

அ. இராமேசுவரத்தில் இ. இராஜஸ்தானில்

ஆ. பொக்ரானில் ஈ. திருச்சி

iii) பொக்ரானில் இரண்டாவதுமுறை அணுகுண்டு வெடிப்புச் சோதனை நடத்திய ஆண்டு எது?

அ. 1998 இ. 2008

ஆ. 1988 ஈ. 1978

iv) எ.பி.ஜே அப்துல்கலாமிற்கு இந்திய அரசு வழங்கிய விருது என்ன?

அ. பரம்வீரசக்ரா இ. பாரதரத்னா

ஆ. பத்மபூஷன் ஈ. பத்மவிபூஷன்

v) எ.பி.ஜே அப்துல்கலாமிற்கு உறுதுணையாக இருந்த இன்னொரு விஞ்ஞானியின் பெயர் என்ன?

அ. சிதம்பரம் இ. வாஜ்பாய்

ஆ. சிவசிதம்பரம் ஈ. அசீயா

**3. பின்வரும் பகுதியைப் படித்து, சுருக்கி எழுதுக** **5**

அமெரிக்காவின் புகழ்பெற்ற பணக்காரர் ஒருவரிடம் நன்கொடை பெறுவதற்காகச் சில கல்லூரி மாணவர்கள் சென்றார்கள். மிகச்சிறிய விளக்கின் ஒளியில் படித்துக்கொண்டிருந்த அவர், விளக்கை அணைத்துவிட்டு அவர்களிடம் பேசத் தொடங்கினார். வந்தவர்கள் இவர் என்ன இப்படி கஞ்சனாக இருக்கிறாரே! இவர் எங்கே நமக்கு நன்கொடை தரப்போகிறார்என்று நினைத்தார்கள். ஆனால் அவரோ, அவர்கள் வியப்படையுமாறு கல்லூரியில் வகுப்பறை கட்டுவதற்காக மூன்று இலட்ச ரூபாய்கொடுத்து உதவினார். அவரைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டிருந்த மாணவர்கள், “ஐயா எங்களுடன் பேசும்போது நீங்கள் விளக்கை அணைக்கக் காரணம் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு அவர் படிபதற்குத்தான் விளக்குத் தேவை. உங்களுடன் பேசுவதற்குத் தேவையில்லை. சில காசுகல்தானே என்று அற்பமாக நினைத்தால் கூடாது. சிறு துளிதான் பெருவெள்ளம் ஆகிறது. நான் சிக்கனமாக இருப்பதனைப் பார்த்துவிட்டு, அதனை நீங்கள் கஞ்சத்தனம் என்று நினைத்தால் கூடாது. நான் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதனால்தான், இந்தத் தொகையை நன்கொடையாகத் தரமுடிந்தது. சிக்கனம் என்பது வேறு கஞ்சத்தனம் என்பது வேறு என்றார்.

## பகுதி -ஆ - எழுதுதல்

**4.** உன் ஊருக்குப் பேருந்து நிழற்குடை வேண்டி போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்கு ஊர்ப்பொது மக்கள் சார்பில் கூட்டு விண்ணப்பம் ஒன்று எழுதுக. **6**

**அல்லது**

நடந்து முடிந்த பள்ளி விளையாட்டுப்போட்டியில் நீளம் தாண்டுதலில் முதல் பரிசு பெற்ற உன் நண்பனை / தோழியைப் பாராட்டி கடிதம் ஒன்று எழுதுக.

(இவ்விரண்டு கடிதங்களிலும் உனது முகவரி: எழிலன் / எழிலி, எண் 25 வள்ளுவர் தெரு, நுங்கம்பாக்கம், சென்னை - 7 எனக் கொள்க)

**5. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை எழுதுக.** **8**

முயற்சியின் உயர்வு - பெருமக்கள் வாழ்வு - முயன்றால் முடியாதது இல்லை - சோதனையும் சாதனையாகலாம் - வெற்றிக்கனிகள்.

**அல்லது**

செல்வம் - சேமிப்பும் செலவும் - திட்டமிட்ட சேமிப்புகளில் முதலீடு - நம்பிக்கை தரும் அரசு சேமிப்புத் திட்டங்கள் - அதிக பணம் தருவதாக ஆசை காட்டும் தனியார் சேமிப்புத் திட்டங்களில் எச்சரிக்கையுடன் இருத்தல் - எதிர்காலத்தில் வளமாக வாழ வழி வகுத்தல்.

**அல்லது**

உணவுகளின் தேவை - விளைநிலங்கள் வீட்டு மனைகள் ஆதல் - நீர் ஆதார ஏரிகள், குளங்கள் அழிக்கப்படுதல் - நீர்வள ஆதாரங்கள் சீர்கெடுதல் - எதிர்காலம் கருதி இயற்கை வளங்களைப் பேணுதல் - உணவும் நீரும் வளம் பெற்றிடத் திட்டமிடல், செயல்படுதல்.

## பகுதி - இ - இலக்கணம்

**6. சான்று தருக.** (மூன்று மட்டும்) **3**

i. முற்றெச்சம்

அ. வந்தாள் படித்தாள்.
இ. வா போ
ஆ. வந்தனள் படித்தனள்
ஈ. வந்தனள் படித்தாள்

ii. குறிஞ்சி நிலத்திற்குரிய மரம்

அ. கொன்றை, காயா
இ. அகில், வேங்கை
ஆ. இலுப்பை, பாலை
ஈ. காஞ்சி, மருதம்

iii. நிரை நேர் நிரை

அ. திருக்குறள்
இ. மகாபாரதம்
ஆ. பீமாராவ்
ஈ. எட்டுத்தொகை

iv. அடி அகரம் ஐ ஆதல்

அ. பாசிலை
இ. பைங்கூழ்
ஆ. செம்மொழி
ஈ. ஆட்டுக்கிடா

v. வஞ்சப்புகழ்ச்சி அணி

அ. ஆடிக்குடத்தடையும் ஆடும்போதே இரையும் .......
ஆ. தேவர் அனையர் கயவர் ................
இ. அவிழ்ந்தன தோன்றி, அலர்ந்தன காயா ...........
ஈ. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் .....................

**7. நிரப்புக.** (மூன்று மட்டும்) **3**

i. மார்கழி, தை ஆகிய இரண்டும் ____________ காலத்திற்குரியன.

அ. இளவேனில்
இ. பின்பனி
ஆ. முன்பனி
ஈ. இளவேனில்

ii. நேரிசையாசிரியப்பாவின் ஈற்றயலடி ____________ வரும்.

அ. நாற்சீராய் இ. ஐஞ்சீராய்

ஆ. முச்சீராய் ஈ. இருசீராய்

iii. வெற்றியைக் கொண்டாடும் திணை ______________.

அ.வஞ்சித்திணை இ. உழிஞைத்தினை

ஆ. பாடாண்திணை ஈ. வாகைத்திணை

iv. உவமையைக் கூறிப் பொருளைப் பெற வைப்பது __________.

அ. சிலேடையணி இ. பிறிது மொழிதலணி

ஆ. செம்மொழி ஈ. உருவக அணி

v. ஔகாரக்குறுக்கம் மொழிக்கு __________ மட்டுமே வரும்..

அ. இடையிலும் கடையிலும் இ. முதலிலும் கடையிலும்

ஆ. கடைசியில் ஈ. முதலில்

**8. கூறியவாறு செய்க. (மூன்று மட்டும்)** **3**

i. வடமேற்கு (பிரித்து எழுதுக)

அ. வட+ மேற்கு இ. வடக்கு + மேற்கு

ஆ. வடம்+ மேற்கு ஈ. வா + மேற்கு

ii. பாடினான் (விகுதியை எழுதுக)

அ. அன் இ. ஆண்

ஆ. ஆன் ஈ. னான்

iii. வெற்றிலை (மை விதி சேர்த்து எழுதுக)

அ.வெறுமை+ இலை இ வெறு + இலை

ஆவேற்று+ இலை ஈ. வெறும் + இலை

iv. நூலகங்கள் (வாய்ப்பாடு எழுதுக)

அ. கூவிளங்காய் இ. கருவிளங்காய்

ஆ. தேமாங்காய் ஈ. கூவிளங்கனி

v. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயனிலாச் சொல். (அணியை எழுதுக)

அ. சொல் பின்வருநிலையணி இ. பொருள் பின்வருநிலையணி

ஆ. சொற்பொருள் பின்வருநிலையணி ஈ. பிறிதுமொழிதலணி

**9. இலக்கணக் குறிப்புத் தருக. (மூன்று மட்டும்)** **3**

i. மெல்லப் பேசினான்

அ. வினையாலணையும் பெயர் இ.குறிப்பு வினைமுற்று

ஆ.பண்புப்பெயர் ஈ. பெயரெச்சம்

ii. ஒப்பில்லை

அ.நேர் நேர் நிரை — இ. நிரை நேர் நிரை

ஆ. நேர் நேர் நேர் — ஈ. நிரை நிரை நேர்

iii. வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு போரிடுவது

அ. தும்பைத் திணை — இ. வஞ்சித் திணை

ஆ. காஞ்சித்திணை — ஈ. நொச்சித்திணை

iv. மரம் + அடி (வகர உடம்படுமெய் சேர்த்து எழுதுக).

அ. மரம் அடி — இ. மர அடி

ஆ. மரமடி — ஈ. மரவடி

v. வால்குழைத்து

அ. உவமைத்தொகை — இ. வியங்கோள் வினைமுற்று

ஆ. இரண்டாம் வேற்றுமைத்தொகை — ஈ. வினைமுற்று

**10. சரியான சொற்றொடரைத் தேர்வு செய்க. (மூன்று மட்டும்)** **3**

i) அ. ஒரு சொல் இரு பொருள்பட அமைந்து வருவது தற்குறிப்பேற்ற அணி.
ஆ. ஒரு சொல் இரு பொருள்பட அமைந்து வருவது பின் வரும் நிலையணி
இ. ஒரு சொல் இரு பொருள்பட அமைந்து வருவது இரட்டுறமொழிதல்
ஈ. ஒரு சொல் இரு பொருள்பட அமைந்து வருவது வஞ்சப்புகழ்ச்சி அணி

ii. அ. ஒருதலைக்காமம் என்பது கைக்கிளை.
ஆ. ஒருதலைக்காமம் என்பது பொதுவியல்.
இ. ஒருதலைக்காமம் என்பது ஐந்திணை.
ஈ. ஒருதலைக்காமம் என்பது காஞ்சித்திணை.

iii. அ . வயலும் வயல் சார்ந்த இடமும் முல்லை நிலம்.
ஆ வயலும் வயல் சார்ந்த இடமும் மருத நிலம்.
இ வயலும் வயல் சார்ந்த இடமும் பாலை நிலம்.
ஈ. வயலும் வயல் சார்ந்த இடமும் நெய்தல் நிலம்.

iv. அ. நேரிசையாசிரியப்பாவின் ஈற்றயலடி இரண்டு சீராக வரும்.
ஆ. நேரிசையாசிரியப்பாவின் ஈற்றயலடி நான்கு சீராக வரும்.
இ. நேரிசையாசிரியப்பாவின் ஈற்றயலடி மூன்று சீராக வரும்.
ஈ. நேரிசையாசிரியப்பாவின் ஈற்றயலடி ஐந்து சீராக வரும்.

v அ. நெய்தல் நிலத் தெய்வம் திருமால் ஆகும்..
ஆ. நெய்தல் நிலத் தெய்வம் வருணன் ஆகும்..
இ. நெய்தல் நிலத் தெய்வம் இந்திரன்ஆகும்..
ஈ. நெய்தல் நிலத் தெய்வம் முருகன் ஆகும்.

## பகுதி - ஈ - உரைநடை

11. **கீழ்க்கண்ட உரைநடைப் பத்தியைப் படித்து, தொடர்ந்து வரும் வினாக்களுக்கு ஏற்ற விடைகளை எழுதுக.** **5**

சங்க காலத்தில் ஒரு முல்லைக் கொடியின் துயர் நீக்க, பாரிவள்ளல் தன் தேரையே ஈந்தார். பல நூற்றாண்டுகள் கழித்துப் பாரிவள்ளலைப் போல வள்ளலார் 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பயிர் வாடத் தாம் வாடினார். வீடுதோறும் இறந்தும் பசியறாது அயர்ந்தவரையும் நீடிய பிணியால் வருந்துவோரையும், ஈடில் மானிகளாய், ஏழைகளாய் நெஞ்சு இளைத்தோரையும் கண்டு வருத்தத்தால் உயிர் இளைத்தார் வள்ளற்பெருமான். இவ்வருத்தம் நீங்கவே வடலூரில் சத்திய தருமச்சாலையை நிறுவிச் சாதி, மத வேறுபாடின்றிப் பசித்தோர்க்கெல்லாம் உணவிட்டார். அங்கு அவர் ஏற்றி வைத்த அடுப்பின் கனல், இன்றும் பல்லோர் பசிப்பிணியைப் போக்கி வருகின்றது.

**வினாக்கள்.**

i. பயிர் வாடத் தாம் வாடியவர் யார்?

ii. பாரிவள்ளல் எதன் துயர் நீக்கத் தம் தேரைக் கொடுத்தார்?

iii. சத்திய தருமச்சாலையை நிறுவியவர் யார்?

iv. வள்ளலார் ஏற்றி வைத்த அடுப்பின் கனல் எத்தனைப் போக்குகிறது?

v. பிணி என்பதன் பொருள் என்ன ?

12. **கீழ்க்காணும் பாடல் வரிகளைப் படித்து பல்விடை வினாக்களுக்கு ஏற்ற விடைகளை எழுதுக.** **4**

வந்து தெண்டனிட் டெழுந்துவாய் புதைத்துற வணங்கிப்
புந்தி கூர்தரப் போற்றிய வள்ளுகிர்ப் புலியை
மந்த ராசல முகம்மது நனிமனம் மகிழ்ந்து
சந்த மென்மணிக் கரத்தினால் சிரமுகம் தடவி

**வினாக்கள்**

i. இப்பாடல் இடம் பெற்றுள்ள படலம் எது?

அ. முகம்மது நபிப்படலம் இ. புலி வசனித்தப் படலம்
ஆ. புலிப்படலம் ஈ. நுபுவத்துப்படலம்

ii. புலி யாரிடம் தெண்டனிட்டது?

அ.உமறுப்புலவரிடம் இ. வழிப்போக்கனிடம்
ஆ. முகம்மது நபியிடம் ஈ. அப்துல்காதரிடம்

iii. சிரம் என்பதின் பொருள் யாது?

அ. கரம் இ. கால்

ஆ.முடி ஈ. தலை

iv. இப்பாடலை எழுதியவர் யார்?

அ. உமறுப்புலவர் இ. சீதக்காதி

ஆ. முகம்மது ஈ. பாரதியார்

**13. விடுபட்ட சீர்களை நிரப்புக.** **2**

i) குன்றேறி ________________ கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் ______________ வினை.

ii) அழுக்கா _____________ ஆக்கம்போன் றில்லை
ஒழுக்கம் ______________ உயர்வு.

14. **எவையேனும் இரண்டு உரைநடைப்பகுதி வினாக்களுக்கு விடை தருக.** **10**

i) அம்பேத்காரின் அரும்பணிகள் குறித்து விவரிக்க.

ii) காந்தியடிகள் பின்பற்றிய கொள்கைகளை தொகுத்து எழுதுக.

iii) வள்ளலார் ஏற்படுத்திய சமரச சுத்த சன்மார்க்க சங்கம் குறித்துக் கட்டுரை எழுதுக.

iv) கலை அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி குறித்து விரிவாக எழுதுக.

v) தமிழரின் இசைக்கலை பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.

15. **எவையேனும் இரண்டு செய்யுட்பகுதி வினாக்களுக்கு விடை தருக.** **8**

i) அப்பூதியடிகளார் வீட்டில் நடந்தவற்றை விவரிக்க.

ii) புலி வசனித்த படலத்தின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

iii) பொருள் செயல் வகை குறித்து வள்ளுவர் கூறுவன யாவை.

iv) குகனுக்கும் இராமனுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலைத் தொகுத்தெழுதுக..

16. **ஏதேனும் ஒரு துணைப்பாட வினாவிற்கு விளக்கமான விடை தருக.** **7**

i). குறட்டை ஒலி - கதையின் கருத்தும் பொருளும் மாறாமல் சுருக்கி எழுதுக

ii). எம். ஜி. இராமச்சந்திரன் பற்றிக் கட்டுரை எழுதுக.

iii) நூலகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி நீ அறிந்தவற்றை விவரிக்க.